மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2022
பயிற்சிப் பரீட்சை - 02

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2022

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022

2

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : .....

- **பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.**
- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும், உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக**.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி


Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER


01) முதலில் உள்ள உருவிற்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.







(1) (2) (3)

02) ஒரு தொகுதியில் உள்ளடக்குவதற்கு மிகப் பொருத்தமான இரண்டு பொருட்கள் எவை?











A B C D E

(1) Dயும் E யும் (2) A யும் D யும் (3) B யும் E யும்






03) கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்குப் பொருத்தமற்ற உரு எது?



(1) (2) (3)

04) இங்கு காட்டப்பட்டுள்ள உருக்களில் மூன்றினை ஒரு கூட்டமாகவும், இரண்டினை இன்னொரு கூட்டமாகவும் பிரிக்கலாம். அக்கூட்டத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.


A ***B*** ***C*** ***D*** ***E***

(1) A B E C D (2) A C E B D (3) A E D B C


05) ஒன்றோடு ஒன்று தொடர்பில்லாத சொற்கள் இடம்பெறும் அடைப்பினைத் தெரிவு செய்க.


கடல்	செம்மை	இலை
சோலை	கருமை	கிளை
கார்த்திகை	பசுமை	பூ


(1) (2) (3)

06) 


தரப்பட்ட உருவில் A பகுதிக்கு மை பூசிய பின்னர் உருவில் காட்டப்பட்டது போன்று முறிகோடு வழியே அம்புக்குறி காட்டும் திசையில் மடிக்கப்பட்டு மீண்டும் விரிக்கப்பட்டபின் தோன்றும் உருவைத் தெரிவு செய்க.



(1)


(2)


(3)

07) ஒரு சதுர வடிவத்தாளை உரு *A* யில் காட்டப்பட்டுள்ளவாறு நடுவில் முறிந்த கோடு வழியே இரண்டாக மடித்து உரு B *பெறப்பட்டுள்ளது*. உரு *B* யில் காட்டப்பட்டுள்ளவாறு முறிந்த கோடு வழியே வெட்டி அத்தாள் துண்டுகளாக்கப்பட்டது.


உரு (*A*)


உரு (*B*)


கிடைக்கும் துண்டுகள் பற்றிய சரியான கூற்றாக அமைவது

(1) நான்கு முக்கோணத் துண்டுகள்

(2) வேறு வேறு மூன்று முக்கோணத் துண்டுகள்


(3) இரண்டு ஒரேயளவான முக்கோணத் துண்டுகள்


08) தரப்பட்ட உருவில் நிறந்தீட்டப்பட்ட பகுதியானது முழு உருவின்





(1) $\frac{1}{2}$ இற்கு கூட (2) $\frac{1}{2}$ இற்கு சமன் (3) $\frac{1}{2}$ இலும் குறைவு

09) *பின்வரும் உருக்களின் உள்ளே உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஒழுங்குக்கேற்ப அமையும் விடை எது?*


A


B



C


D


(1) C,A,B,D (2) C, A, D, B (3) A, D, B, C

10) இலையின் கீழ் உருவாகுவேன்
இலையையே உணவாக்குவேன்
உரோமத்தால் தீங்கு செய்வேன்
நிறைவானால் நன்மை செய்வேன்
மேலுள்ள வரிகளினூடாகக் குறிப்பிடப்படுவது.
(1) தும்பி (2) வண்ணத்துப்பூச்சி (3) மயிர்க்கொட்டி

11) அசேதனப் பசளைப் பாவனையானது புற்றுநோய் ஏற்படுவதற்கு காரணமாகின்றது. இதனால் எமது ஆயுட்காலம் குறைவடைந்து செல்கின்றது. எமது அழிவுக்கு நாமே காரணமாகின்றோம். மேலே தரப்பட்ட கூற்றுக்களினூடாக உணர்த்தப்படுவது
(1) அசேதனப் பசளையே பயிர்ச்செய்கைக்குச் சிறந்தது.
(2) எமது ஆயுட்காலம் அதிகரிக்கும்.
(3) இயற்கைப் பசளையைப் பயன்படுத்த வேண்டும்.


12) 
உருவில் இனங்காணக்கூடிய செவ்வகங்களின் எண்ணிக்கை யாது?
(1) 7 (2) 6 (3) 8

13) *தரப்பட்ட கோலத்தில்* A கட்டத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.



(1) 45 (2) 11 (3) 20


14) *பின்வருவனவற்றுள் எந்த மூன்று வடிவங்களை இணைப்பதனால் சதுரம் ஒன்றைப் பெற முடியும்.*
.



A B C D E

(1) A, C, D (2) B, D, E (3) A, C, E

15) கீழே புத்தகம் ஒன்றிலுள்ள இருபக்கங்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் சரியாகப் பக்கங்கள் குறிக்கப்பட்டுள்ள புத்தகத்திலுள்ள பக்கங்களின் கூட்டுத்தொகையாக அமைவது





(1) 311 (2) 245 (3) 287


16) கமலனிடம் 10 ரூபா குற்றிகளாக ரூபாய் 120.00 உம், விமலனிடம் 2 ரூபா குற்றிகளாக ரூபாய் 40.00 உம் இருந்தன. இந்தப் பணத்தைக் கொண்டு கமலன் 20 ரூபாய் பெறுமதியான 4 பேனைகளையும் விமலன் 10 ரூபாய் பெறுமதியான 3 பென்சில்களையும் வாங்கினார்கள். இருவரிடமும் மீதமாக உள்ள நாணயக் குற்றிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 9 (2) 8 (3) 12

17) *கீழ் வரும் எண் கோலத்தில் வினாக்குறி இடப்பட்ட இடத்திற்கு பொருத்தமான எண் யாது?*








(1) 84 (2) 94 (3) 35

18) குறித்த ஓர் எண்ணுடன் 13 ஐக் கூட்டி வரும் விடையிலிருந்து 10 ஐக் கழிக்கும்போது 49 கிடைக்கும் எனின், ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட எண் யாது?

(1) 46 (2) 47 (3) 56

19) குறித்த வருடமொன்றில் அடுத்தடுத்து வரும் இருமாதங்களின் நாட்களின் கூட்டுத் தொகை 62 ஆகும். அவ்விரு மாதங்களுக்கும் முன்னர் உள்ள இரு மாதங்களிலும் உள்ள நாட்களின் கூட்டுத் தொகை யாது?

(1) 61 (2) 60 (3) 59

20) 

இச் சதுரமுகி தாயக்கட்டையானது எல்லா முகங்களிலும் இரட்டை எண்களைக் கொண்டுள்ளது. எதிர் முகங்களிலுள்ள எண்களின் கூட்டுத்தொகை ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும் அதேவேளை ஆறு முகங்களிலும் உள்ள எண்கள் அடுத்துள்ள இரட்டை எண்களாகும் எனின், இலக்கம் 8 உள்ள முகத்திக்கு எதிரே இருப்பதற்கு பொருத்தமான இலக்கம் எது?

(1) 4 (2) 2 (3) 6

21) பின்வரும் கூற்றுக்களின் ஒழுங்குக்கேற்ப சரியாக அமைந்துள்ள விடையைத் தெரிவு செய்க.


- ✶ நீலக்கோள் எனப்படுவது
- ✶ மிகவும் சிறிய கோள்
- ✶ மிகவும் பெரிய கோள்
- ✶ ஒளிவளையம் உள்ள கோள்

A - சனி B - புவி C - வியாழன் D - புதன்


(1) $ACBD$ (2) $BDCA$ (3) $ACDB$

www.ikedu.lk


22) நிறங்கள், சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள் என்பவற்றிற்கிடையிலான தொடர்பை விபரிக்கும் பொருத்தமான உருவாக அமைவது.



(1)





(2)



(3)

23) கட்டத்திலுள்ள தளவடிவங்களைப் பயன்படுத்தி வினாக்குறி இடப்பட்டுள்ள இடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.





(1) 


(2) 

(3) 


24) ஓட்டப்போட்டி ஒன்றில் சமீர் மூன்றாவதாக ஓடிய கமலேசை முந்திக் கொண்டு ஓடுகிறான் எனின் சமீர் போட்டியில் எத்தனையாவது இடத்தில் ஓடிக்கொண்டிருக்கிறான்?

(1) 1வது இடத்தில் (2) 2வது இடத்தில் (3) 3வது இடத்தில்

25)




உரு 1




உரு 2

உரு ஒன்றில் உள்ள P என்ற எழுத்தின் மீது உரு இரண்டில் உள்ள M என்ற எழுத்து பொருந்துமாறு வைக்கும் போது தோன்றும் உருவைத் தெரிவு செய்க.


(1)



(2)



(3)



26) ஒரு நிரையில் சமஇடைவெளியில் பலநிறக் கொடிகள் நாட்டப்பட்டிருந்தன. சிவப்பிற்கும் பச்சைக்கும் நடுவில் நீலமும், பச்சைக்கும் நீலத்திற்கும் நடுவில் மஞ்சளும், நீலத்திற்கும் சிவப்பிற்கும் நடுவில் கறுப்பும் உள்ளது. சிவப்பிற்கும் பச்சைக்கும் இடையிலுள்ள தூரம் $36\ m$ எனின் சிவப்புக்கும் மஞ்சளுக்கும் இடையிலான தூரம் யாது?

(1) $27\ m$ (2) $24\ m$ (3) $18\ m$

27) எனது அண்ணாவிற்கு ஒரு தங்கையும் இரண்டு தம்பிமார்களும் மாத்திரம் உள்ளனர். எனக்கு இரு அண்ணன்மார்களும் ஒரு தம்பியும் மாத்திரம் உள்ளனர். அதன்படி என்னைப்பற்றிய சரியான கூற்றாக அமைவது

(1) ஆண்பிள்ளை (2) பெண்பிள்ளை (3) கூறமுடியாது

28) சாந்தி தரம் 1 இல் பாடசாலை சேரும் போது சாந்தியின் வயதின் 5 மடங்கு அவளின் தந்தையின் வயது ஆகும். சாந்தி தற்போது புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் வகுப்பில் கற்கிறாள் எனின், தந்தையின் வயது யாது?

(1) 35 வயது (2) 30 வயது (3) 34 வயது

29) எரிபொருள் நிரப்புவதற்கான வரிசையில் கண்ணன் 52 வது நபராக நிற்கின்றார். பின்னால் இருந்து பார்க்கும் போது 47 வது நபராக நிற்கின்றார் அவ்வரிசையின் இறுதியில் குமார் நிற்கின்றான். எனின், குமாருக்கு முன்னால் உள்ளவர்கள் எத்தனை பேர்?

(1) 98 பேர் (2) 97 பேர் (3) 99 பேர்

30) 3,6,9,12 ஆகிய இலக்கங்கள் மட்டும் பொறிக்கப்பட்டுள்ள சுவர்க் கடிகாரமொன்று இரு துண்டுகளாக உடைந்து விட்டது. இவ்விரு துண்டுகளில் ஒரு துண்டில் உள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகை மற்றைய துண்டில் உள்ள இலக்கங்களின் கூட்டுத் தொகையின் இரு மடங்கிலும் மூன்று அதிகமாக காணப்பட்டது. எனின், அதில் யாதாயினும் ஒரு துண்டில் உள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகையாக இருக்கக் கூடியது.?

(1) 18 (2) 15 (3) 9

31) மயூரி $36\ km$ தூரத்திலுள்ள தனது தாத்தா வீட்டிற்கு செல்லும் போது $\frac{2}{6}$ பங்கு தூரத்தை துவிச்சக்கரவண்டியிலும், மிகுதித் தூரத்தில் $\frac{2}{8}$ பங்கினை பேருந்திலும் மீதித் தூரத்தை மோட்டார் வண்டியிலும் சென்று தாத்தா வீட்டினை அடைந்தாள். எனின், அவள் மோட்டார் வாகனத்தில் சென்ற தூரம் எவ்வளவு?


(1) $12\ km$ (2) $18\ km$ (3) $6\ km$

32) அந்தக் கல்லூரியில் ஆண்கள் மட்டுமே படிக்கிறார்கள் என்னுடைய பிள்ளைகளும் அந்தக் கல்லூரியில் படிக்கிறார்கள் ஆகவே

(1) என்னுடைய பிள்ளைகள் எல்லாம் ஆண்கள்

(2) என்னுடைய ஆண்பிள்ளைகள் அந்தக் கல்லூரியில் படிக்கிறார்கள்.

(3) எல்லோருடைய ஆண்பிள்ளைகளும் அந்தக் கல்லூரியில் படிக்கிறார்கள்

33) 

அருகிலுள்ள உருவில் அவதானிக்கக் கூடிய நான்கு பக்கங்களை உடைய வடிவங்கள் எத்தனை உள்ளன?


(1) 5

(2) 3


(3) 4

www.ikeda.lk


34) டினு A என்ற இடத்திலிருந்து வடக்கு நோக்கி $75\,m$ சென்று பின் மேற்கு நோக்கி $35\,m$ சென்றபின், மீண்டும் வடக்கு நோக்கி $25\,m$ சென்று B என்ற இடத்தை அடைந்தான் எனின் அவன் சென்ற பயணப் பாதையைக் காட்டும் உரு எது?



(1)



(2)



(3)

35) நோயாளி ஒருவருக்கு சிகிச்சை அளிப்பதற்காக நாளொன்றுக்கு 4 மணித்தியாலத்திற்கு ஒருமுறை 2 மருந்து வில்லைகள் வீதம் கொடுக்கப்பட்டது எனின், 4 நாட்களுக்கு கொடுக்கப்பட்ட மருந்து வில்லைகளின் மொத்த எண்ணிக்கை யாது?


(1) 56 (2) 48 (3) 50

36) அருகில் தரப்பட்டுள்ள அட்டைத்துண்டில் ஆங்கில சிறிய எழுத்துக்கள் (Small) தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு எழுத்துக்களின் பின்பக்கத்தில் அதன் ஆங்கில பெரிய எழுத்துக்கள் (Capital) தரப்பட்டுள்ளன. இரண்டு பக்கங்களையும் முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாற்றமின்றி தெரியும் எழுத்துக்களின் எண்ணிக்கை?

(1) 3 (2) 4 (3) 5

a	b	c
d	e	f
g	h	i

37)



A, B, C, D ஆகிய ஒவ்வொரு பகுதிகளிலும் உள்ள இரண்டு இலக்கங்களுக்கும் இடையிலான வித்தியாசத்தைக் கொண்டு ஆக்கக் கூடிய மிகப் பெரிய எண் எது?

(1) 8651 (2) 1568 (3) 8615

38) சம இடைவெளியில் வட்டமாக மாணவர்கள் நின்றபோது 1 வது மாணவனுக்கு எதிரே 9 வது மாணவன் நிற்கின்றான். எனின் வட்டத்தில் நிற்கும் மாணவர்கள் எத்தனை பேர்.?

(1) 16 மாணவர்கள் (2) 18 மாணவர்கள் (3) 20 மாணவர்கள்

39)

5 ரூபாய்	*2 ரூபாய்*
10 ரூபாய்	

உண்டியலொன்றில் இருந்த நாணயங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களை இவ்வரைபு காட்டுகின்றது. உண்டியலில் உள்ள நாணயங்களின் மொத்தப் பெறுமதி 81 ரூபாய் ஆகும். அதன்படி உண்டியலிலுள்ள ரூபாய் 2 நாணயங்களின் எண்ணிக்கை?

(1) 8 (2) 6 (3) 3

40) வியாபாரி ஒருவர் 5 பந்துகளை 50 ரூபாவிற்கு வாங்கி 4 பந்துகளை ஐம்பது ரூபாவிற்கு விற்றார். அவர் நாள் ஒன்றில் பந்துகளை விற்றதனால் 50 ரூபா இலாபம் பெற்றிருந்தால் அன்று அவர் விற்ற பந்துகளின் எண்ணிக்கை யாது?

(1) 10 (2) 12 (3) 20

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2022
பயிற்சிப் பரீட்சை - 2

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2022

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022

2

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- **உமது சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில் உள்ள** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழே கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற சரியான புள்ளிகளின் எண்ணிக்கை
02	
03	
04	
05	
06	
07	
08	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

PROGRAMMES



Foundation Studies
Foundation in Science
Foundation in Business

Diploma Studies
Diploma in Nursing
Diploma in Physiotherapy
Diploma in Electrical and Electronic Engineering
Diploma in Biotechnology
Diploma in Finance
Diploma in Business Management



Undergraduate Studies
Bachelor of Medicine & Bachelor of Surgery (MBBS)
Bachelor of Dental Surgery
Bachelor of Dental Technology (Hons)
Bachelor of Pharmacy (Hons)
Bachelor of Science Biomedical Sciences
Bachelor of Physiotherapy (Hons)
Bachelor in Nursing Sciences (Hons)
Bachelor of Science (Hons) Biotechnology
Bachelor of Science (Hons) Bioinformatics
Bachelor of Engineering (Hons) in Electrical and Electronic Engineering
Bachelor of Computer Science
Bachelor (Hons) in Business Marketing
Bachelor of Science (Hons) Accounting & Finance
Bachelor (Hons) in Finance & Management
Bachelor of Science (Hons) Management Information Systems



Postgraduate Studies
Master in Science (Medical Biochemistry)
Master in Science (Medical Physiology)
Master in Science (Medical Microbiology)
Master in Science (Human Anatomy)
Master in Science (Pharmacy)
Master of Pharmacy (Clinical Pharmacy)
Master of Science Biotechnology
Master of Physiotherapy (Musculoskeletal)
Master of Science in Management
Master of Business Administration (MBA)
Doctor of Philosophy (Medical Microbiology)
Doctor of Philosophy (Medical Biochemistry)
Doctor of Philosophy (Pharmacy)
Doctor of Philosophy (Biotechnology)

071-922-6963

01. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

மனிதன் உட்பட ஒவ்வொரு ஜீவராசியும் உயிர் வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது. சுவையான உணவை உண்பதைவிட சத்தான உணவை உண்பதே சிறந்ததாகும். உணவு இல்லையேல் உடல் சோர்வடைந்துவிடும். உடலில் சக்தி உற்பத்தியாவதற்கும் உடல் அங்கங்கள் ஆரோக்கியமாகச் செயற்படுவதற்கும் உணவே காரணமாகின்றது நாம் காலை உணவைத் தவிர்க்காமல் உண்ண வேண்டும். அது மட்டுமல்லாது இரசாயன உணவுகளைத் தவிர்த்து இயற்கையான உணவுகளை உண்ணுதல் மூலம் நோய்நொடி ஏற்படாமல் நீண்டகாலம் சிறப்பாக வாழ முடியும்.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) மனிதன் உட்பட ஒவ்வொரு ஜீவராசியும் உயிர் வாழ்வதற்கு அவசியமானது எது?

……....

(ii) மேனி என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

……....

(iii) தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக.

……....

(iv) இணைமொழி ஒன்றினைத் தருக.

……....

(v) காலப்பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக.

……....

(vi) செயற்கையான என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

……....

02. அ.ற்றிணை இறந்தகால பன்மை வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. பறந்தன 2. சென்றது 3. வந்தாள்

03. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

நல்ல / நித்திரை / பழக்கம் / ஆகும் / விட்டெழுவது / அதிகாலையில்

……..

04. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.

ஆசிரியர் சிற்பங்களைத் தொட வேண்டாம் என்று கூறினார்

05. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் '✓' எனவும் பிழையாயின் '✗' எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(i) ஒவ்வொரு பூவும் அழகானது. ( )

(ii) குயில்கள் இனிமையாகக் கூவியது. ( )

(iii) அவள் கலகலவென்று சிரித்தாள். ( )

(iv) குருவி தானியங்களைக் கொத்தித் தின்றன. ( )

www.lkedu.lk

06. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) சிகிரியா ஓவியங்கள்.....(பழமை / பழைமை) வாய்ந்தன.

(ii) அம்மா உணவு சமைப்பதற்கு.....(எண்ணெய் / எண்ணை) பயன்படுத்தினார்.

07. பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) சிறுவயதுப் பழக்கம் நீங்காது

.....

(ii) பின்வரும் பழமொழியைப் பூர்த்திசெய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.
ஆற்றிலே போட்டாலும் ..... போடு

08. பின்வரும் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான தனிச் சொல்லை எழுதுக.

(i) நூலாசிரியர் ஒருவர் தாமியற்றிய நூலின் முன்னே தனது நூலைப்பற்றிக் கூறும் உரை

.....

(ii) ஒன்றைப் போல் இருக்கும் மற்றொன்று

.....

09. பின்வரும் ஒவ்வொரு மரபுத்தொடரும் வெளிப்படுத்தும் கருத்தை கட்டத்திற்குள் இருந்து தெரிவு செய்து கீறிட்ட இடங்களில் எழுதுக.

(i) கதை வளர்த்தல் : .....

(ii) தட்டிக் கொடுத்தல் : .....

உயர்ச்சியடைதல் / உற்சாகப்படுத்துதல் / பேச்சை விரித்தல் / சாக்குப்போக்குச்சொல்லுதல்

10. பின்வரும் வாக்கியத்தை பெண்பால், ஒருமை, இறந்தகால வாக்கியமாக மாற்றி எழுதுக.
அரசன் நீதி தவறாது நாட்டை ஆட்சி செய்தான்.

.....

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

(i) Hospital .....

(ii) Butterfly .....

12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i) 

(ii) 

....

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) school / go / I / everyday / to

……

(ii) the / is / ball / She / hitting

……

14. 'பந்தி காமரய' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

……..

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

எல்லோரும் கை கழுவுங்கள்

……..

16. 'இருபத்தொன்பதாயிரத்து ஐந்நூற்று எண்பத்தேழு' இந்த எண்ணை இலக்கத்தில் எழுதுக.


……..

17. பின்வரும் எண்களை இறங்குவரிசைப்படுத்தி எழுதுக.

8210, 8038, 8407

……..

18. எண்சட்டத்தில் வகை குறிக்கப்படும் எண்ணைச் சொற்களில் எழுதுக.



……

19. எண்கோலத்துக்கேற்ப வெற்றிடங்களில் இடம் பெற வேண்டிய எண்களை எழுதுக.

……, ……, 47, 55, 63, 71

20. அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு விடையளிக்குக.

பாடசாலை	A	B	C	D
மாணவர் தொகை	2365	690	1812	2015

(i) பாடசாலை A பாடசாலை C ஆகிய இரண்டிலும் உள்ள மொத்த மாணவர் தொகை எவ்வளவு?

……

(ii) பாடசாலை D யை விட பாடசாலை B இல் எத்தனை மாணவர்கள் குறைவாக உள்ளனர்.

……


21. 432 இனை 4 இனால் வகுக்கும் போது கிடைக்கும் விடை யாது?

……..

www.lkedu.lk

22. நகரம் x இலிருந்து நகரம் y வரையுள்ள தூரம் 6km 850m ஆகும். நகரம் y இலிருந்து நகரம் z வரையுள்ள தூரம் 8km 400m ஆகும். நகரம் x இலிருந்து நகரம் y இனூடாக நகரம் z வரையுள்ள மொத்தத் தூரம் யாது?

……km……m

23.  வட்டத்தில் உள்ள தோடம்பழங்களின் எண்ணிக்கையை உரோம எண்குறியில் எழுதுக.

……..

24. பி.ப. 6.20 இற்குப் படிக்கத் தொடங்கிய குமார் 2 மணித்தியாலங்கள் 25 நிமிடங்களின் பின்னர் படிப்பை நிறுத்தினான். அவன் படிப்பை நிறுத்திய நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக.

……

25.  இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதியை தசம எண்ணாக எழுதுக.


……

26. ஒன்றின் விலை ரூபாய் 95.00 வீதம் 8 அப்பியாசப் புத்தகங்களை வாங்கிக் கொண்டு ரூபாய் 1000 நாணயத்தாளொன்றைக் கொடுத்தால் மீதியாகக் கிடைக்கும் பணம் எவ்வளவு?

……..


27. முரளி 2l 800ml பாலிலிருந்து அரைவாசியை வீட்டுத் தேவைக்குப் பயன்படுத்திய பின் எஞ்சியுள்ள பாலை 4 போத்தல்களில் சம அளவுகளில் ஊற்றினான் எனின் அவன் ஒரு போத்தலில் ஊற்றிய பாலின் அளவு யாது?

……மில்லிலீற்றர்

28.  உருவில் காட்டப்பட்டுள்ள திண்மப் பொருளின் பெயரை எழுதுக.

……

29. ஒரு மணித்தியாலத்தில் பழக்கடை ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட பழங்கள் பற்றிய தகவல்கள் கீழேயுள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளது.



(i) பழக்கடையில் அதிகளவில் விற்பனை செய்யப் பட்ட பழம் எது?

……

(ii) பழக்கடையில் விற்கப்பட்ட பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

……

- **30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. பயிர்ச் செய்கைக்குச் சாதகமான பிராணி
    1. மயிர்கொட்டி 2. மண்புழு 3. தண்டுகோதி

31. இலங்கைக்கு கிழக்கே காணப்படும் நாடுகள்
    1. மலேசியா, தாய்லாந்து
    2. இந்தியா, பாகிஸ்தான்
    3. அமெரிக்கா, தென்னாபிரிக்கா

32. பின்வருவனவற்றுள் எதனால் சூழல் அதிகமாக மாசடைகிறது.
    1. ஞாயிற்றுக்கலங்கள் மூலம் மின்சக்தி பெறும் போது
    2. மாட்டுவண்டி, துவிச்சக்கரவண்டி என்பவற்றைப் பயன்படுத்தும் போது
    3. நிலக்கரி மூலம் அனல் மின்சக்தி நிலையம் இயங்கும் போது

33. நாம் தகவல்களைப் பெறும் இலத்திரனியல் ஊடகங்களில் ஒன்றாக அமைவது.
    1. நாளிதழ் 2. சிற்றிதழ்கள் 3. வானொலி

34. பொது வாகனமொன்றில் பயணம் செய்யும் போது செய்யக் கூடாத செயல் எது?
    1. கர்ப்பிணித் தாய்மாருக்கு ஆசனத்தை வழங்குதல்
    2. பயணச்சீட்டைப் பெற்றுக் கொள்ளல்
    3. மிதிபலகையில் பயணித்தல்

35. இலங்கையில் இயற்கைத் துறைமுகம் காணப்படும் இடம்
    1. கொழும்பு 2. திருகோணமலை 3. அம்பாந்தோட்டை

36. பின்வருவனவற்றில் இலைக்கஞ்சியைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் இலைகளை மட்டும் உள்ளடக்கிய விடை
    1. பொன்னாங்காணி, வல்லாரை, சாத்தாவாரி
    2. அகத்தி, முருங்கை, வேம்பு
    3. தூதுவளை, பொன்னாவரசு, வெற்றிலை

37. எரிகாயம் ஏற்பட்ட இடத்தில் முதலில் செய்ய வேண்டியது
    1. எரிகாயம் ஏற்பட்ட இடத்துக்கு மேலே துணிக் கீலங்களால் இறுக்கமாகக் கட்டி விடுதல்
    2. எரிகாயத்தின் மீது பற்பசை பூசுதல்
    3. எரிகாயம் ஏற்பட்ட இடத்தில் வழிந்து செல்லுமாறு தண்ணீரை ஊற்றுதல்

38. தானியப் பயிர் வகைக்குரிய பருப்புக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய உணவு?
    1. பிட்டு 2. பயறு 3. மரவள்ளிக்கிழங்கு

39. "தன்னிறைவான ஒரு நாட்டில் சூரியனும் சந்திரனும் இருக்கும் காலமெல்லாம் அறத்தைப் பாதுகாத்தவாறு மக்கள் யாவரும் ஓங்கட்டும்" இக் கருத்தை வெளிப்படுத்துவது இலங்கையின்,
    1. தேசியக் கொடி 2. தேசிய கீதம் 3. தேசிய இலச்சினை

40. இலங்கைக்கே உரித்தான முலையூட்டி விலங்கு
    1. கொம்பு ஓணாண் 2. கலவத்தன் 3. புலத்ஹய்யா

41. பழைய தயிர்ச்சட்டி பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள விதம் உருவில் காட்டப்படுகிறது. இம் மாற்று முறை தொடர்பாகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் சரியான கூற்று எது?
    1. பிராணிகளிடமிருந்து பாதுகாப்பது கடினமாகும்.
    2. ஒரே இடத்தில் வைத்து வளர்க்க வேண்டும்.
    3. இடவசதி குறைவான இடங்களில் வளர்ப்பதற்கு உகந்தது.




www.ikeduk

42. பற்சில்லுகளைக் கொண்ட ஓர் உபகரணம்
1. மின்விசிறி 2. துவிச்சக்கரவண்டி 3. ஒற்றைச்சில்லு வண்டி

43. 


இப் படத்தில் உள்ள தேசிய வீரருடன் தொடர்புபடாத கூற்று
1. ஆங்கிலேய அரசினால் தேசத்துரோகி எனப் பிரகடனப்படுத்தப்பட்டவர்.
2. ஊவா வெல்லஸ்ஸை கலகத்தை கட்டுப்படுத்துவதற்காக ஆங்கிலேயர்களால் அனுப்பப்பட்டவர்.
3. ஸ்ரீ விக்ரம் சர்வ சித்தி எனும் பெயரில் மூன்று பிரதேசங்களுக்கு முடிசூட்டி அபிசேகம் செய்யப்பட்டவர்.

44. படங்களில் தரப்பட்டுள்ள பாசிப்பயறு வித்துக்கள் அடங்கிய பாத்திரங்களை சில நாட்களின் பின்னர் அவதானிக்கும் போது எந்தப் பாத்திரத்தில் உள்ள பாசிப்பயறு வித்து முளைக்காதிருப்பதனைக் காணலாம்.



1. A 2. B 3. C

45. சர்வதேச விண் வெளி வீரர்கள் தினம் கொண்டாடப்படுவது
1. மார்ச் 20 2. மார்ச் 22 3. ஏப்ரல் 12

46. 

படத்தில் A இனால் குறிக்கப்படுவது
1. சுழலும் இடம்
2. கையினால் விசையைப் பிரயோகிக்கும் இடம்
3. உபகரணத்தினால் பொருளின் மீது விசை பிரயோகிக்கப்படும் இடம்

47. "எல்லாவற்றிலும் என்னால் வெற்றி பெற முடியும்" என்னும் எண்ணம் மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின் எத்தனையாவது படிமுறைக்கு உரியதாகும்.
1. மூன்றாம் படிமுறை 2. நான்காம் படிமுறை 3. ஐந்தாம் படிமுறை

48. பின்வருவனவற்றுள் சமூக விரோதச் செயற்பாடாகக் கருத முடியாதது
1. போதைப் பொருள் விற்பனை செய்தல்
2. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்
3. வீதியோரங்களில் உணவுப் பொருட்களை விற்பனை செய்தல்

49. தாவர வகையை மாத்திரம் உண்ணும் பிராணியையும் மாமிச வகையை மாத்திரம் உண்ணும் பிராணியையும் ஒழுங்குமுறைப்படி குறிப்பிடும் விடை எது?
1. புலி, கோழி 2. நரி, காகம் 3. மாடு, சிங்கம்

50. தேசப்படம் ஒன்றில் அதிவேகப் பாதையைக் குறித்துக்காட்ட பயன்படும் நிறம் எது?
1. சிவப்பு 2. ஊதா 3. மஞ்சள்

51. நாற்று மேடைகளிலிருந்து நாற்றுக்கள் பெறப்பட்டுப் பாத்திகளில் நடப்படுகின்ற பயிர் வகைகளை மாத்திரம் கொண்டமைந்த விடையினைனத் தெரிக.
    1. கத்தரி, வெண்டி 2. தக்காளி, கத்தரி 3. வெண்டி, பயற்றை

52. நீருக்கு இருக்கக் கூடிய ஓர் இயல்பாக அமையாதது
    1. நிலையான வடிவம் இருத்தல்
    2. வெப்பமாக்கும் போது நீராவி வெளியேறல்
    3. குளிர்த்தும் போது பனிக்கட்டியாக மாறுதல்

53. "ஏலேலோ ஐலசா...." என்று தொடங்கும் பாடல்
    1. உழவர் பாடல் 2. மீனவர் பாடல் 3. அரிவிவெட்டுப் பாடல்

54. பின்வருவனவற்றுள் கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று
    1. பல்லாங்குழி 2. கரப்பந்தாட்டம் 3. துடுப்பாட்டம்

55. செயற்கை நிறப் பொருட்கள், சுவையூட்டிகள் ஆகியன சேர்க்கப்பட்ட உணவுகளை உட்கொள்வதனால் ஏற்படக் கூடிய நோய்.
    1. நெருப்புக் காய்ச்சல் 2. புற்றுநோய் 3. நீரிழிவு

56. மீள் சுழற்சிக்குட்படுத்தக் கூடியது என்பதைக் காட்டுவதற்கு உலகெங்கும் பொதுவாகப் பயன்படுத்தப்படும் நியமமான குறியீடு



(1)


(2)


(3)

57. பசவக் குளத்தைக் கட்டுவித்த மன்னன்
    1. மகாசேனன் 2. பண்டுகாபயன் 3. தாதுசேனன்

58. கிழக்கு மாகாணத்தினுள் அடங்கும் மாவட்டங்களை மட்டும் உள்ளடக்கிய விடை
    1. திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு
    2. அம்பாறை, மாத்தளை, திருகோணமலை
    3. திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு

59. புதுமணத் தம்பதிகளுக்கு கையில் நீர் வார்க்கும் பழக்கமுடைய இனத்தவர்
    1. தமிழர் 2. சிங்களவர் 3. முஸ்லிம்

60. "தொலைக்காட்சி பார்ப்பதால் ஏற்படும் தீமைகள்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்)

    1. .....
       .....
    2. .....
       .....
    3. .....
       .....

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

பயிற்சிப் பரீட்சை 2 (07.07.2022)

தரம் 5 **புள்ளித்திட்டம்**

2

வினாத்தாள் I (விடைகள்)

01)	3	11)	3	21)	2	31)	2
02)	2	12)	2	22)	1	32)	2
03)	3	13)	1	23)	3	33)	2
04)	2	14)	3	24)	3	34)	1
05)	1	15)	2	25)	1	35)	3
06)	1	16)	1	26)	1	36)	2
07)	3	17)	2	27)	2	37)	1
08)	2	18)	1	28)	3	38)	1
09)	2	19)	1	29)	2	39)	3
10)	3	20)	3	30)	3	40)	3

வினாத்தாள் II (விடைகள்)

வினா இல		விடைகள்	புள்ளிகள்
01)	(i)	உணவு	01 புள்ளி
	(ii)	உடல்	01 புள்ளி
	(iii)	நாம்	01 புள்ளி
	(iv)	நோய்நொடி	01 புள்ளி
	(v)	காலை	01 புள்ளி
	(vi)	இயற்கையான	01 புள்ளி
02)	பறந்தன		01 புள்ளி
03)	அதிகாலையில் நித்திரை விட்டெழுவது நல்ல பழக்கம் ஆகும்		01 புள்ளி
04)	ஆசிரியர் "சிற்பங்களைத் தொடவேண்டாம்" என்று கூறினார்.		01 புள்ளி
05)	(i)	✓	01 புள்ளி
	(ii)	x	01 புள்ளி
	(iii)	✓	01 புள்ளி
	(iv)	x	01 புள்ளி
06)	(i)	பழைமை (கோடிட வேண்டும்.)	01 புள்ளி
	(ii)	எண்ணெய் (கோடிட வேண்டும்.)	01 புள்ளி

www.ikedu.lk

07)	(i)	தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்	01 புள்ளி
	(ii)	அளவறிந்து	01 புள்ளி
08)	(i)	முன்னுரை	01 புள்ளி
	(ii)	போலி	01 புள்ளி
09)	(i)	பேச்சை விரித்தல்	01 புள்ளி
	(ii)	உற்சாகப்படுத்துதல்	01 புள்ளி
10)	அரசி நீதி தவறாது நாட்டை ஆட்சி செய்தாள்.		01 புள்ளி
11)	(i)	வைத்தியசாலை	01 புள்ளி
	(ii)	வண்ணத்துப்பூச்சி	01 புள்ளி
12)	(i)	Umbrella	01 புள்ளி
	(ii)	Zebra	01 புள்ளி
13)	(i)	I go to school everyday.	01 புள்ளி
	(ii)	She is hitting the ball.	01 புள்ளி
14)	வகுப்பறை		01 புள்ளி
15)	ஹமோம அத்த சோதன்ன		01 புள்ளி
16)	29587		02 புள்ளிகள்
17)	8407, 8210, 8038		02 புள்ளிகள்
18)	ஏழாயிரத்தைம்பது / ஏழாயிரத்து ஐம்பது		02 புள்ளிகள்
19)	31, 39		02 புள்ளிகள்
20)	(i)	4177	02 புள்ளிகள்
	(ii)	1325	02 புள்ளிகள்
21)	108		02 புள்ளிகள்
22)	15 250		02 புள்ளிகள்
23)	ix		02 புள்ளிகள்
24)	20:45		02 புள்ளிகள்
25)	0.7		02 புள்ளிகள்
26)	ரூபாய் 240.00		02 புள்ளிகள்
27)	350		02 புள்ளிகள்
28)	நான்முகி		02 புள்ளிகள்
29)	(i)	அப்பிள்	02 புள்ளிகள்
	(ii)	27	02 புள்ளிகள்

30)	**2**	36)	**1**	42)	**2**	48)	**3**	54)	**1**
31)	**1**	37)	**3**	43)	**2**	49)	**3**	55)	**2**
32)	**3**	38)	**2**	44)	**3**	50)	**2**	56)	**3**
33)	**3**	39)	**3**	45)	**3**	51)	**2**	57)	**2**
34)	**3**	40)	**2**	46)	**2**	52)	**1**	58)	**3**
35)	**2**	41)	**3**	47)	**3**	53)	**2**	59)	**2**

(30 புள்ளிகள்)

60) பொருத்தமான வாக்கியங்கள் (6 புள்ளிகள்)

- முழு விடைத்தாளையும் கருத்தில் கொண்டு உறுப்பமையவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருப்பின் 2 புள்ளிகள் வழங்குக.

www.ikedu.lk